# 08-04-2023 செய்தி

## கடலுக்குள் 30,000 மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைகள்

**திட்டம்**

- ராமேசுவரத்தில் இருந்து கன்னியாகுமரி வரையிலான கடல் பகுதிகளில், கடலுக்குள் 30 ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட காற்றாலைகளை அமைக்க மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.
- இந்த திட்டத்தை செயல்படுத்தும் அமைப்பாக (நோடல் போர்ட்) தூத்துக்குடி வ.உ.சி துறைமுகத்தை அமைச்சகம் நியமித்துள்ளது.
- கடலுக்குள் காற்றாலைகளை அமைப்பது தொடர்பாக, டென்மார்க் மற்றும் நார்வே நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் ஏற்கெனவே ஆய்வு செய்து, மத்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளன.




**2 ஜிகாவாட் திறன்**

- நிலப்பரப்பில் அமைக்கப்படும் காற்றாலைகளில் 2 மெகாவாட் அளவுக்குத்தான் மின்சார உற்பத்தி செய்ய முடியும்.
- ஆனால், கடலுக்குள் அமைக்கப்படும் காற்றாலைகளில் 15 மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும்.
- இந்த காற்றாலைகளின் இறகுகள் மிகவும் பெரிதாக இருக்கும். காற்றாலை உதிரி பாகங்களை தூத்துக்குடி வ.உ.சி துறைமுகத்தில் இணைத்து, கடலுக்குள் குறிப்பிட்ட தொலைவுக்குக் கொண்டு சென்று அவை நிறுவப்படும்.

## இந்தியாவை உளவு பார்க்க இலங்கையில் ரேடார்

- இலங்கையின் டோண்ட்ரா பே என்ற இடத்தில், 45 ஏக்கர் பரப்பளவில் 'ரேடார்' அமைத்து, கூடன்குளம், கல்பாக்கம் அணு மின்நிலையம் உட்பட இந்திய பெருங்கடல்பகுதியை உளவு பார்க்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளது.
- சீனாவிடம் இருந்து, நம் அண்டை நாடான இலங்கை பல ஆயிரம் கோடி ரூபாய் கடன் உதவி பெற்றுள்ளது. இதன் காரணமாக, இலங்கை அரசை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள சீனா முயற்சிக்கிறது.
- இதன் வாயிலாக இந்தியாவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதே சீனாவின் திட்டமாக உள்ளது.



**கண்டனம்**

- இலங்கையில் உள்ள அம்பன் தோட்டா துறைமுகத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்கு எடுத்துள்ள சீனா, அங்கு தங்கள் நாட்டின் 'யுவான் வாங் 5' என்ற உளவு கப்பலை ஆறு நாட்களுக்கு நிறுத்தி வைத்தது.
- இலங்கையின் தென்கோடியில் உள்ள மீன்பி துறைமுகமான டோண்ட்ரா பே என்ற இடத்தில், 45 ஏக்கர் பரப்பளவில் ரேடார் அமைக்க சீனா திட்டமிட்டு வருவதாகவும், அதற்கான இடத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்கு தரும்படி இலங்கை அரசிடம் பேச்சு நடத்தி வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

**அச்சுறுத்தல்**

- நெல்லை மாவட்டம் கூடன்குளம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கத்தில் உள்ள அணு மின் நிலையங்களை சீனா உளவு பார்க்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.
- இந்திய பெருங்கடலில் பிரிட்டனுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள டைகோ கார்சியா தீவுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளத்தையும் இந்த ரேடார் உளவு பார்க்கும் திறன் உடையது.

SURESH

## அனைவருக்குமான அறிவியல்

- ரூ.12,600 கோடி திட்டமாக மகாராஷ்டிராவில் ஈர்ப்பு அலை கண்டறிதல் வசதியை அமைக்க மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இரட்டை லேசர் இன்டர்ஃபெரோமீட்டர் ஈர்ப்பு அலை கருவிகளைக் கொண்ட கண்காணிப்பகமானது டிடக்டரை கொண்டிருக்கும்.
- அமெரிக்காவில் ஏற்கெனவே இது செயல்பாட்டில் உள்ளது. புவியீர்ப்பு அலைகளை கண்டறிதல் 2016-ல் வானியலில் ஒரு புதிய சகாப்தத்தை தொடங்க வழிவகுத்தது.
- வானத்தில் உள்ள ஈர்ப்பு அலைகளின் ஆதாரங்களை கண்டறிவதற்கான கூட்டுத்திறனை மேம்படுத்துவதற்காக LIGO இந்தியாவின் ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக 3-வது டிடக்டர் அமைப்பானது இந்தியாவில் கட்டமைக்கப்பட உள்ளது.
- அமைச்சரவையானது இரண்டு கூறுகளில் ஒப்புதல் அளித்துள்ளது. முதலாவதாக இந்தியா ஈர்ப்பு இயற்பியல் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் துல்லியமான தொழில்நுட்பங்களை கையாளுதல், அதிநவீன கட்டுப்பாட்டு அமைப்பகளை கையாளுதல் ஆகியவற்றின் உலகளாவிய தளமாக மாற்றுதல்.
- இது பெரிய அறிவியல் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கான சூழலை உறுதிப்படுத்துகிறது. இந்த கண்காணிப்பகத்தின் கட்டமைப்பிற்கான நிதியை சரியான நேரத்தில் விடுவிப்பதும், ஒதுக்கப்பட்ட ஆதாரங்களை தாமதமின்றி வழங்குவதும் இங்கு தொடக்கத் தேவையாக உள்ளது.
- இரண்டாவதாக, LIGO இந்தியா திட்டமானது இந்திய சமூகத்தின் அறிவியல் உடனான உறவினை பெரிய அறிவியலில் கிடைத்துள்ள வாய்ப்புகளை பயன்படுத்தி புத்திசாலித்தனமாக கணக்கிடுகிறது.
- சமீபத்தில் சலாகேரே அறிவியல் நகரம் மற்றும் இந்தியாவை தளமாகக் கொண்ட நியூட்ரினோ ஆய்வகம் உள்ளிட்ட திட்டங்களுடன் இந்தியா போட்டியுடனான உறவைக் கொண்டுள்ளது.
- இயற்கை வளங்களின் நிலையான பயன்பாடு, கார்பன் இலக்குகள், நியாயமன மாற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றின் பின்னணியில் நிலபயன்பாட்டு மாற்றத்திற்கான தவிர்க்கமுடியாத தாக்கங்களுடன் கூடிய நிலஉரிமைகள் மீதான உரிமை அதிக நிலபயன்பாடு வேண்டும்.
- எடுத்துக்காட்டு ஹவாயின் 30 மீட்டர் தொலைநோக்கியானது உள்ளூர் மக்கள் புனிதமாக கருதும் நிலத்தில் கட்டப்பட்டுள்ளது.
- நிலங்களை இயற்பியல் பயன்பாட்டிற்கு பயன்படுத்து தொடர்பான ஒரு கருத்து நிலவுகிறது. அது என்னவெனில் வரலாற்று ஆராய்ச்சியாளர் லியான்ட்ரா ஸ்வேனர் கருத்துப்படி, அறிவியலானது காலனித்துவத்தின் முகவராக செயல்படுகிறது.
- பொருளதார வளர்ச்சியடைந்த நாட்டில் தேவையான முன்முயற்சியானது LIGO இந்தியா இத்திட்டத்திற்கு சிந்திக்க வேண்டும்.

